பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 10 2024 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாடு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- சிறு நகரங்களில் தனியார் பண்பலை வானொலி அலைவரிசைகள் தொடங்கப்படுவது உள்ளூர் கலாச்சாரத்தை பிரபலப்படுத்துவதுடன் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 95 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- எல்லை தாண்டி மீன் பிடித்தாகக் கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 16 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

- இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புனேவில் இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<>>>

ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாடு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமது ரஷ்ய பயணத்தின்போது பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் தாம் விவாதித்ததாக திரு. நரேந்திர மோடி அதில் கூறியுள்ளார்.

இதனிடையே ரஷ்யப் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் புதுதில்லி திரும்பினார்.

<<<>>>

சிறு நகரங்களில் தனியார் பண்பலை வானொலி அலைவரிசைகள் தொடங்கப்படுவது உள்ளூர் கலாச்சாரத்தை பிரபலப்படுத்தும் என தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நடவடிக்கை, வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்கும் என்றார்.

<<<>>>

தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 95 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

மகளிர் மேம்பாட்டை மேலும் வலுப்படுத்துவதைக் கருத்தில்கொண்டு இந்நிறுவனத்தின் அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தமிழகத்தில் 4 லட்சத்து 73 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளதாகவும், இவற்றில் 54 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புகளின் விற்பனையை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மாநில அரசின் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் காரணமாக நாட்டிலேயே பணிபுரியும் பெண்கள் அதிகம் உள்ள மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் கடந்த 3 ஆண்டுகளில் விற்பனை அதிகரித்துள்ளதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோ-ஆப்டெக்ஸ் துணிகளின் தரம் தற்போது அதிகரித்துள்ளது என்று கூறினார்.

இந்நிறுவனம் 3 ஆண்டுகளுக்கு முன்பு நஷ்டத்தில் இயங்கி வந்ததாகவும், தற்போது லாபத்தில் இயங்கவதாவும் அவர் கூறினார்.

தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில், 48 நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக திரு. காந்தி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், போதைப் பொருள் உற்பத்தி மற்றும் கடத்தலின் மையமாக தமிழகம் மாறியுள்ளது என்று கூறியுள்ளார்.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இளைஞர்கள் இதுபோன்ற தீய செயல்களில் ஈடுபடாமல், ஆக்கப்பூர்வமான செயல்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

சென்னையில் அரசின் நிதியுதவியுடன் பெண்களால் இயக்கப்படும் பிங்க் ஆட்டோ சேவைக்கு தகுதியான பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சென்னையில் வசிக்கும் 250 பெண்களுக்கு சிஎன்ஜி மற்றும் ஹைபிரிட் ஆட்டோக்களை வாங்க தலா ஒரு லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்றும், மீதித் தொகை கடனாக வழங்கப்படும் என்றும் சமூக நலத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

எல்லை தாண்டி மீன் பிடித்தாகக் கூறி தமிழக மீனவர்கள் 16 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

ராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற அந்த மீனவர்களின் இரு விசைப் படகுகளையும் இலங்கை கடற்படை பறிமுதல் செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் ரயில் விபத்துகள் பெருமளவு குறைந்துள்ளதாக பிஜேபி மாநில ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு ஹெச் ராஜா கூறியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2004-ம் ஆண்டுக்குப் பின் சராசரி ரயில் விபத்துகள் தொடர்பான புள்ளி விவரங்கள் இதனை எடுத்துக்காட்டுவதாக கூறினார்.

ரயில் விபத்துகள் அதிகரித்துள்ளதாக கூறுவது தவறான குற்றச்சாட்டு என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு எந்த ஒரு விசாரணை அமைப்பையும் தவறாகப் பயன்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆதாரங்களின் அடிப்படையில்தான் சோதனைகள் நடத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் பயங்கரவாதத்தைத் தடுக்கவும் போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்தவும் தமிழக காவல்துறை முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும், மத்திய அரசின் அமைப்புகள்தான் நடவடிக்கை எடுத்துள்ளன என்றும் திரு ஹெச் ராஜா தெரிவித்தார்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

பிலிப்பைன்ஸ் நாட்டைத் தாக்கிய டிராமி புயல் காரணமாக அந்நாட்டின் பல பகுதிகளில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

------------

ஜம்மு-கஷ்மீர் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா, புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷாவை நேற்று சந்தித்துப் பேசினார்.

------------

பிரான்சில் நடைபெற்ற உலக திறன் போட்டிகளில் பதக்கம் வென்ற இந்தியக் குழுவினரை, புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி கௌரவிக்கவுள்ளார்.

------------

முதுமை தொடர்பாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை ஏற்பாடு செய்துள்ள தேசிய அளவிலான கலாச்சார நிகழ்ச்சியை அத்துறைக்கான மத்திய இணை அமைச்சர் திரு பி.எல். வர்மா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

------------

ஆகாஷவாணி செய்திப் பிரிவின் முன்னாள் தலைமை இயக்குநர் பி.கே. பந்தோபாத்யாயா, கொல்கத்தாவில் நேற்று காலமானார்.

------------

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் இன்று நடைபெறும் என மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

------------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அருகே நடைபெற்ற மக்கள் தொடர்புத் திட்ட முகாமில், மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு நாசர் பங்கேற்று, 496 பயனாளிகளுக்கு 14 கோடி ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

------------

சேலம் மாவட்டம் சங்ககிரியில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்திற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு. ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்.

------------

தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டி ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டிடங்களை மாநில அமைச்சர்கள் திரு. மா. சுப்பிரமணியன் மற்றும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் திறந்து வைத்தனர்.

------------

தீபாவளி பண்டிகையை ஒட்டி தமிழகத்தில் 6 ஆயிரத்து 585 தற்காலிக பட்டாசு கடைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

------------

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறையின் சார்பாக, மக்கள் குறை தீர்ப்புக் கூட்டம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு ரஜத் சதுர்வேதி தலைமையில் நடைபெற்றது.

------------

தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுநிறுவனங்கள் குழுவினர் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு பொது நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

------------

திருச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் மேற்கொண்ட சோதனையில், கணக்கில் வராத 69 ஆயிரம் ரூபாய் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மையை முறையாகப் பின்பற்றாத நிறுவனங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்று மாநகராட்சி ஆணையர் திரு ஜெ குமரகுருபரன் கூறியுள்ளார்.

------------

உலக மயக்க மருந்தியல் தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டதையொட்டி, மயக்க மருந்துகள் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி, சென்னை ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை சார்பில் சென்னையில் நடைபெற்றது.

------------

சென்னையில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் திருமதி ராஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

------------

*விளையாட்டுச் செய்தி*

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

புனேவில் உள்ள மகாராஷ்டிர கிரிக்கெட் சங்க மைதானத்தில் காலை மணி 9.30 மணிக்கு இப்போட்டி தொடங்கவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்று 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

<<<<The End>>>>